ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

## பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமோழி

# 3.10 – நெறிந்தகருங்குழல்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 3.10 – நெறிந்தகருங்குழல்

‡ நெறிந்த கருங்குழல் மடவாய் !⋆ நின் அடியேன் விண்ணப்பம்⋆
செறிந்த மணி முடிச் சனகன்⋆ சிலை இறுத்து நினைக் கொணர்ந்த -
தறிந்து⋆ அரசு களைகட்ட⋆ அருந்தவத்தோன் இடை விலங்கச்⋆
செறிந்த சிலை கொடுதவத்தைச்⋆ சிதைத்ததும் ஓர் அடையாளம் ‖**3.10.1** ‖

அல்லியம் பூ மலர்க் கோதாய் !⋆ அடி பணிந்தேன் விண்ணப்பம்⋆
சொல்லுகேன் கேட்டருளாய்⋆ துணை மலர்க் கண் மடமானே !⋆
எல்லியம் போதினி திருத்தல்⋆ இருந்ததோர் இட வகையில்⋆
மல்லிகை மா மாலை கொண்டு⋆ அங்கார்த்ததும் ஓர் அடையாளம் ‖ **3.10.2** ‖

கலக்கிய மா மனத்தனளாய்க்⋆ கைகேசி வரம் வேண்ட⋆
மலக்கிய மா மனத்தனனாய்⋆ மன்னவனும் மறாதொழிய⋆
குலக் குமரா ! காடுறையப்⋆ போ என்று விடை கொடுப்ப⋆
இலக்குமணன் தன்னொடும்⋆ அங்கேகியதோர் அடையாளம் ‖**3.10.3** ‖

வார் அணிந்த முலை மடவாய் !⋆ வைதேவீ ! விண்ணப்பம்⋆
தேர் அணிந்த அயோத்தியர் கோன்⋆ பெருந்தேவீ ! கேட்டருளாய்⋆
கூர் அணிந்த வேல் வலவன்⋆ குகனோடும் கங்கை தன்னில்⋆
சீர் அணிந்த தோழமை⋆ கொண்டதும் ஓர் அடையாளம் ‖ **3.10.4** ‖

மான் அமரு மென்னோக்கி !⋆ வைதேவீ ! விண்ணப்பம்⋆
கான் அமரும் கல்லதர் போய்க்⋆ காடுறைந்த காலத்து⋆

தேன் அமரும் பொழிற் சாரல் ⋆ சித்திர கூடத்திருப்ப ⋆
பால் மொழியாய் ! பரத நம்பி ⋆ பணிந்ததும் ஓர் அடையாளம் ‖ **3.10.5** ‖

சித்திரகூடத்திருப்பச் ⋆ சிறு காக்கை முலை தீண்ட ⋆
அத்திரமே கொண்டெறிய ⋆ அனைத்துலகும் திரிந்தோடி ⋆
வித்தகனே ! இராமாவோ ! ⋆ நின் அபயம் என்றழைப்ப ⋆
அத்திரமே அதன் கண்ணை ⋆ அறுத்ததும் ஓர் அடையாளம் ‖ **3.10.6** ‖

மின் ஒத்த நுண் இடையாய் ! ⋆ மெய் அடியேன் விண்ணப்பம் ⋆
பொன் ஒத்த மான் ஒன்று ⋆ புகுந்தினிது விளையாட ⋆
நின் அன்பின் வழி நின்று ⋆ சிலைபிடித்தெம்பிரான் ஏகப் ⋆
பின்னே அங்கிலக்குமணன் ⋆ பிரிந்ததும் ஓர் அடையாளம் ‖ **3.10.7** ‖

மைத் தகு மா மலர்க் குழலாய் ! ⋆ வைதேவீ ! விண்ணப்பம் ⋆
ஒத்த புகழ் வானரக்கோன் ⋆ உடன் இருந்து நினைத் தேட ⋆
அத்தகு சீர் அயோத்தியர் கோன் ⋆ அடையாளம் இவை மொழிந்தான் ⋆
இத்தகையால் அடையாளம் ⋆ ஈதவன் கை மோதிரமே ‖ **3.10.8** ‖

‡ திக்கு நிறை புகழாளன் ⋆ தீ வேள்விச் சென்ற நாள் ⋆
மிக்க பெரும் சபை நடுவே ⋆ வில் இறுத்தான் மோதிரம் கண்டு ⋆
ஒக்குமால் அடையாளம் ⋆ அனுமான் ! என்று ⋆ உச்சிமேல்
வைத்துக் கொண்டுகந்தனளால் ⋆ மலர்க் குழலாள் சீதையுமே ‖ **3.10.9** ‖

‡ வார் ஆரும் முலை மடவாள் ⋆ வைதேவி தனைக் கண்டு ⋆
சீர் ஆரும் திறல் அனுமன் ⋆ தெரிந்துரைத்த அடையாளம் ⋆
பார் ஆரும் புகழ்ப் புதுவைப் ⋆ பட்டர்பிரான் பாடல் வல்லார் ⋆
ஏர் ஆரும் வைகுந்தத்து ⋆ இமையவரோடிருப்பாரே ‖ **3.10.10** ‖

அடிவரவு — நெறிந்த அல்லி கலக்கிய வாரணி மான் சித்திரகூடத்து மின் மைத்தகு திக்கு வாராரும் கதிர்

## நெறிந்தகருங்குழல் முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்